RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025

மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

www.malaithanthi.in

DAILY EVENING

மாலை நாளிதழ்

சிவகங்கை | மலர்-5 | இதழ்- 150 | ஜூன்.7 2026 | ஞாயிற்றுக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

"மறந்து விடாதீர்கள்... தவெக ஆட்சி நடப்பதே நமது தயவில் தான்!" மு.க.ஸ்டாலின் பேச்சு

சென்னை: ஜூன்.7-

"நம்முடைய கூட்டணியில் இருந்த கட்சிகளின் தயவோடுதான் இன்றைக்கு இந்த ஆட்சி நடந்து கொண்டிருக்கிறது" என திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் பேசினார்.

சென்னை அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், செங்கல்பட்டு சட்டமன்றத் தொகுதியில் அதிமுக வேட்பாளராகப் போட்டியிட்ட காட்டாங்கொளத்தூர் வடக்கு ஒன்றிய அதிமுக செயலாளர் கஜேந்திரன் தலைமையில் மாற்றுக் கட்சியினர் திமுகவில் இணையும் விழா நடந்தது.

அப்போது பேசிய திமுக தலைவர் ஸ்டாலின், "எப்போதுமே ஓர் இயக்கத்தில் இருந்து இன்னொரு இயக்கத்துக்குப் பிரிந்து போகிறார்கள் என்று சொன்னால், ஏதோ ஒரு லாபத்தை அடிப்படையாக வைத்து, ஏதோ வசதியை மனதில் கொண்டு, ஆளுங்கட்சியை நோக்கித்தான் அதிகமாகப் போவது உண்டு. அதைத்தான் நாமும் பார்த்திருக்கிறோம்.

ஆனால், இன்றைக்கு திமுக ஆளுங்கட்சி அல்ல; ஆளுங்கட்சியாக இருந்து, இப்போது எதிர்க்கட்சியாக மாறி இருக்கிறது. அதனால் எதிர்க்கட்சியை நோக்கி நீங்கள் எல்லாம் வந்திருக்கிறீர்கள் என்று சொன்னால், பதவிக்காக நீங்கள் வரவில்லை, சொகுசாக வாழ வேண்டும் என்பதற்காக நீங்கள் எல்லாம் வரவில்லை. பணியாற்ற வேண்டும், இந்த இயக்கத்திற்குத் துணை நிற்க வேண்டும், தமிழ் சமுதாயத்திற்கு நாம் பாடுபட வேண்டும், இழந்திருக்கும் ஜனநாயகத்தைப் பாதுகாக்க வேண்டும் என்ற உணர்வோடு வந்திருக்கிறீர்கள்.

வெற்றி, தோல்வி என்பது நம்மைப் பொறுத்தவரையில்

மாறி மாறி வரும். அதற்காக வெற்றியைக் கண்டு வெறி கொண்டு அலைந்து கொண்டிருப்பதும் இல்லை; தோல்வியைக் கண்டு துவண்டு விடாமல் என்றைக்கும் பணியாற்றக் கூடியவன்தான் திமுகக்காரன் என்பதை இன்றைக்கு நாம் நிரூபித்துக் கொண்டிருக்கிறோம்.

இந்த நிலையில்தான், இன்றைக்கு வெற்றி வாய்ப்பை நாம் இழந்திருந்தாலும், ஆட்சிப் பொறுப்பை நாம் இழந்திருந்தாலும், எதிர்க்கட்சி என்ற நிலையில் இருந்து பணியாற்றிக் கொண்டிருக்கும் இந்த சூழ்நிலையில், நீங்கள் எல்லாம் இங்கு கஜேந்திரன் தலைமையில் வந்து சேர்ந்திருப்பதை பார்த்து நான் மகிழ்ச்சி அடைகிறேன், பெருமைப்படுகிறேன். நீங்கள் கவலைப்பட வேண்டிய அவசியம் இல்லை.

இப்போது ஆட்சி நடப்பதே நம்முடைய தயவில் தான் என்பதை நீங்கள் மறந்துவிடக் கூடாது. ஏனென்றால், நாம் வெற்றி பெற வேண்டும்; திமுக தலைமையில் ஆட்சி அமைய வேண்டும்; எதிர்க்கட்சிகள் எல்லாம் தோற்க வேண்டும் என்ற நிலையில் தான் நாம் தேர்தல் களத்தைச் சந்தித்தோம். நம்முடைய கூட்டணியில் இருந்த கட்சிகளின் தயவோடு தான் இன்றைக்கு இந்த ஆட்சி நடந்து கொண்டிருக்கிறது. திமுக ஆட்சிக்கு வர வேண்டும் என்று கருதி நம்மோடு கூட்டணியில் இருந்த கட்சிகளின் தயவோடுதான் இன்றைக்கு இந்த ஆட்சி நடந்து கொண்டிருக்கிறது.

அந்தக் கூட்டணிக் கட்சிகளின் தலைவர்களே பல இடங்களில் குறிப்பிட்டுச் சொல்லி இருக்கிறார்கள், "நாங்கள் வருகிறபோது, எங்கள் கூட்டணிக் கட்சியின் தலைவர் திமுக தலைவர் மு.க.ஸ்டாலினிடத்தில் சொல்லிவிட்டுத் தான் வந்திருக்கிறோம்" என்று சொன்னார்கள்.

அவர்கள் சொல்லிவிட்டுச் செல்லுகிற நேரத்தில் நான் சொன்னேன், "நீங்கள் செல்லுங்கள்; உங்களுடைய விருப்பம்; உங்களுக்கு இருக்கும் ஜனநாயகம்; நான் தடுக்க மாட்டேன். நாட்டிலே ஜனாதிபதி ஆட்சி வந்துவிடக் கூடாது; அதன் மூலமாக பாஜக ஆட்சி தமிழ்நாட்டில் வந்துவிடக் கூடாது என்ற அடிப்படையில் தான் அவர்களை நான் வழியனுப்பி வைத்தேன். எனவே, நம்முடைய தயவோடு நடைபெறும் இந்த ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைக்க இந்த நிகழ்ச்சியில் உறுதி எடுப்போம்" என்று ஸ்டாலின் பேசினார்.

நார்வே செஸ் சாம்பியன் பிரக்ஞானந்தாவுக்கு முதல்வர் விஜய் வாழ்த்து

சென்னை: ஜூன்.7-

நார்வே செஸ் 2026 தொடரில் பட்டத்தை வென்ற முதல் இந்தியர் என்ற வரலாற்றுச் சாதனையைப் படைத்த கிராண்ட்மாஸ்டர் பிரக்ஞானந்தாவுக்கு முதல்வர் விஜய் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

நார்வே செஸ் போட்டியில் பட்டம் வென்றார் இந்திய கிராண்ட் மாஸ்டர் பிரக்ஞானந்தா. இதன் மூலம் இந்த பட்டத்தை வென்ற முதல் இந்தியர் என்ற சாதனையை அவர் படைத்துள்ளார்.

இதனையடுத்து, முதல்வர் விஜய் தனது எக்ஸ் தளத்தில், "நார்வே தலைநகர் ஆஸ்லோவில் நடைபெற்ற நார்வே

செஸ் 2026 (Norway Chess 2026) தொடரில் அறிவார்ந்த ஆட்டத்தை வெளிப்படுத்தி, பட்டத்தை வென்ற முதல் இந்தியர் என்ற வரலாற்றுச் சாதனையைப் படைத்திட்ட கிராண்ட்மாஸ்டர் பிரக்ஞானந்தாவுக்கு எனது மனமார்ந்த வாழ்த்துகள்.

ஒரே தொடரில் நடப்புச் சாம்பியன் மாக்னஸ் கார்ல்செனை இரண்டு முறையும், நான்கு போட்டிகளில் தொடர்ந்து வெற்றியும் பெற்று சாதனை படைத்துள்ளார். தமிழ்நாட்டிற்கும், இந்தியாவிற்கும் பெருமை சேர்த்துள்ள கிராண்ட்மாஸ்டர் பிரக்ஞானந்தா புதிய சாதனைகளைப் படைத்திட எனது வாழ்த்துகள்" இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

கே.என்.நேரு மீது லஞ்ச ஒழிப்பு துறை வழக்கு: ஜூன் 23 வரை நடவடிக்கை எடுக்கக் கூடாது என நீதிபதிகள் உத்தரவு

சென்னை: ஜூன்.7-

கடந்த திமுக ஆட்சி காலத்தில் நகராட்சி நிர்வாகத் துறையில் 2,538 உதவிப் பொறியாளர்கள் மற்றும் இளநிலைப் பொறியாளர்கள் உள்ளிட்ட பணி நியமனங்களுக்கு ரூ.634 கோடி வரை லஞ்சம் பெற்று முறைகேடாக நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளதாக குற்றம்சாட்டி டிஜிபிக்கு அமலாக்கத் துறை கடிதம் அனுப்பியது.

அதன் அடிப்படையில் முன்னாள் அமைச்சர் கே.என்.நேரு உள்ளிட்டோர் மீது வழக்குப்பதிவு செய்ய லஞ்ச ஒழிப்புத்துறைக்கு உத்தரவிடக் கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் அதிமுக எம்.பி ஐ.எஸ்.இன்பதுரை வழக்கு தொடர்ந்திருந்தார்.

இவ்வழக்கை விசாரித்த உயர் நீதிமன்றம், சம்பந்தப்பட்டவர்கள் மீது வழக்குப்பதிவு செய்ய லஞ்ச ஒழிப்புத் துறைக்கு உத்தரவிட்டது. ஆனால், லஞ்ச ஒழிப்புத் துறை வழக்குப்பதிவு செய்யவில்லை எனக்கூறி, உயர்நீதிமன்றத்தில் இன்பதுரை அவமதிப்பு வழக்கு தொடர்ந்திருந்தார்.

அதேபோல் வழக்குப்பதிவு செய்ய பிறப்பித்த உத்தரவை எதிர்த்து கே.என்.நேரு மற்றும் தமிழக அரசு தரப்பிலும் மறுஆய்வு மனுக்கள் தாக்கல்செய்யப்பட்டிருந்தன. இதன் மீதான விசாரணை ஜூன் 23க்கு தள்ளி வைக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், இந்த விவகாரத்தில் முன்னாள் அமைச்சர் கே.என்.நேரு உள்ளிட்டோர் மீது லஞ்ச ஒழிப்புத்துறை வழக்குப்பதிவு செய்துள்ளதாக, தலைமை நீதிபதி எஸ்.ஏ.தர்மாதிகாரி மற்றும் நீதிபதி ஜி.அருள்முருகன் ஆகியோர் அடங்கிய அமர்வில் நேரு தரப்பில் ஆஜரான மூத்தவழக்கறிஞர் பி.எச். அர்விந்த் பாண்டியன் முறையீடு செய்தார்.

அப்போது அவர், ''இதற்கு முன்பாக இருந்த அரசு தலைமை வழக்கறிஞர், இந்த வழக்குகள் விசாரணைக்கு வரும்வரை எந்த நடவடிக்கையும் எடுக்கமாட்டோம் என ஏற்கெனவே நீதிமன்றத்தில் உத்தரவாதம் அளித்தி ருந்தார்'' என்றார்.

அரசு தலைமை வழக்கறிஞர் விஜய் நாராயண் ஆஜராகி, ''நகராட்சி பணி நியமனங்களில் கோடிக்கணக்கில் முறைகேடு நடந்துள்ளதாக அமலாக்கத்துறை ஆதாரப்பூர்வமாக அனுப்பிய கடிதத்தின் அடிப்படையில் கே.என்.நேரு உள்ளிட்டோர் மீது லஞ்ச ஒழிப்புத்துறை வழக்குப்பதிவு செய்துள்ளது'' என்றார்.

அப்போது குறுக்கிட்ட தலைமை நீதிபதி. ''இந்த விவகாரம் தொடர்பான நீதிமன்ற அவமதிப்பு உள்ளிட்ட வழக்குகள் இம்மாத இறுதியில் விசாரணைக்கு வரவுள்ள நிலையில், அதுவரை எந்தநடவடிக்கையும் எடுக்க மாட்டோம் என முந்தைய அரசு தலைமை வழக்கறிஞர் உத்தரவாதம் அளித்திருந்தார்.

ஆனால் அதை மீறி தற்போது எதற்காக அவசர கதியில் வழக்குப்பதிவு செய்துள்ளீர்கள்?'' என கேள்வி எழுப்பினார். அதற்கு தலைமை வழக்கறிஞர் விஜய் நாராயண், ''முந்தைய அரசு தலைமை வழக்கறிஞர் அளித்துள்ள உத்தரவாதம், தற்போது எங்களைக் கட்டுப்படுத்தாது. மேலும் வாய்மொழியாகவே அவர் உத்தரவாதம் அளித்துள்ளார்.

அதுதொடர்பாக எனக்கு தெரியாது'' என்றார். அதையடுத்து நீதிபதிகள், ''இந்த வழக்கு கடந்த ஏப்ரல் மாதம் விசாரணைக்கு வந்த போது அடுத்த விசாரணை வரை எந்த நடவடிக்கையும் எடுக்க மாட்டோம் என முந்தைய அரசு தலைமை வழக்கறிஞர் உத்தரவாதம் அளித்திருந்தார்.

எனவே தற்போதைய சூழலில் லஞ்ச ஒழிப்புத்துறையின் மேல் நடவடிக்கையை நிறுத்திவைப்பதால் அரசுக்கு எந்த பாதிப்பும் வந்துவிடாது. எனவே இந்த வழக்கில் ஜூன் 23 வரை யார் மீதும் எந்த நடவடிக்கையும் எடுக்கக்கூடாது'' என உத்தரவிட்டு விசாரணையை தள்ளிவைத்தனர்.

கோவையில் மாவட்ட, மண்டல் தலைவர்கள் உட்பட

அண்ணாமலை ஆதரவாளர்கள் பாஜகவில் இருந்து விலகல்

கோவை: ஜூன்.7-

பாஜகவில் இருந்து அண்ணா மலை நேற்று வெளியேறிய நிலையில், கோவையில் அவரது ஆதரவாளர்களான மாவட்ட தலைவர்கள் உட்பட பலர் விலகி, பாஜகவுக்கு அதிர்ச்சி அளித்துள்ளனர்.

அண்ணாமலைக்கு தொடர்ந்து போஸ்டர் அடித்து, தனிக்கட்சி தொடங்குவதை எதிர்பார்த்திருந்த அவரது தீவிர ஆதரவாளரான பாஜக முன்னாள் மாவட்ட தலைவர் பாலாஜி உத்தம ராமசாமி நேற்று செய்தியாளர்களிடம் கூறும்போது, "அண்ணாமலை தொடங்கிய 'வீ தி லீடர்' அமைப்பில் உறுப்பினராக சேர்ந்துள்ளோம்.

இது பாஜகவின் 'பி'டீம் கிடையாது. வரும் தேர்தலில் போட்டி என அண்ணாமலை தெரிவித்துள்ளார். அது இடைத்தேர்தலாகவும் இருக்கும். உள்ளாட்சித் தேர்தலாகவும் இருக்கும்.

விஜய் அண்ணாமலை ஆகிய இருவரும்தான் இனி தமிழக அரசியலில் இருப்பார்கள்" என்றார். மற்றொரு தீவிர ஆதரவாளரான கோவை தெற்கு மாவட்ட பாஜக தலைவர் சந்திரசேகர் கட்சியில் இருந்து வெளியேறினார்.

அதேபோல் தெற்கு மாவட்டத்தில் உள்ள 22 மண்டல் தலைவர்களில் 14 பேர் விலகிய நிலையில் அவர்களுடன், பொறுப்பாளர்கள் மற்றும் ஆதரவாளர்களும் விலகினர்.

முன்னாள் மாவட்ட தலைவரும், எம்பி தேர்தலில் பொள்ளாச்சி தொகுதியில் போட்டியிட்டவருமான கே.வசந்தராஜன் வெளியிட்டுள்ள கடிதத்தில், "கடந்த 1998ம் ஆண்டு முதல் கிளைத் தலைவராக ஆரம்பித்து எம்.பி. வேட்பாளர் வரை என் போன்ற சாமானியரை உயர்த்தியது பாஜக.

கடந்த 28 ஆண்டுகளாக பயணித்த நிலையில், தற்போதைய தமிழக பாஜக, கட்சிக்கு பாடுபட்டவர்களை மரியாதையுடன் நடத்த வேண்டும் என்பது எனது ஆவல்.

இந்த நிலையில் உயிருக்கும் மேலாக நேசித்த பாஜகவில் இருந்து விலகுகிறேன். தமிழக நலன் கொண்ட தேசிய சிந்தனை கொண்ட, ஊழலற்ற, நேர்மையான அரசியல் பாதையில் அண்ணாமலையுடன் இணைந்து பயணிக்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

"பாஜகவுக்கே திரும்புங்கள்... நடவடிக்கை இல்லை!" அண்ணாமலை இயக்கத்தில் இணைந்தோருக்கு நயினார் அழைப்பு

சென்னை, ஜூன்.7-

பாஜக மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன் செய்தியாளர்களிடம் கூறும்போது, "அண்ணாமலை 'வீ தி லீடர்ஸ்' என்ற இயக்கத்தை ஆரம்பித்திருப்பதாக தொலைக்காட்சி மூலம் அறிந்து கொண்டேன். அதில் ஒரு சில பாஜக பொறுப்பாளர்கள் இணைந்துள்ளனர். அதோடு அடிமட்ட பொறுப்பாளர்களும் அங்கு சென்றுள்ளனர்.

பிரதமர் மோடியின் ஆசிர்வாதத்தை பெற்றுள்ளோம். இது ஓர் இயக்கம்தான் என்றும் சொல்லியிருக்கிறார்கள். அவர்களை மூளைச் சலவை செய்துள்ளனர். பாஜகவில் இருந்து விலகியவர்கள் மீண்டும் கட்சிக்கு திரும்பியதாகத்தான் வரலாறு உள்ளது.

பிரதமர் மோடி, அமித் ஷா ஆகியோரின் ஆசிர்வாதம் எந்த இயக்கத்துக்கும் கிடையாது. பாஜக நாடு, தேசம் என்ற சித்தாந்தத்தின் அடிப்படையில்தான் இயங்கி கொண்டிருக்கிறது. பாஜக தொண்டர்கள் எதையும் நம்பி, எங்கும் செல்ல வேண்டாம் என கேட்டுக்கொள்கிறேன். அந்த இயக்கத்திலும் இருந்துகொண்டு, பாஜகவிலும் இருக்கலாம் எனச் சொல்வார்கள். ஆனால் அப்படி இருக்க முடியாது.

பாஜக உலகிலேயே மிகப் பெரிய கட்சி. உலகத் தலைவர்கள் வரிசையில் முதல் வரிசையில் இருக்கிறார் பிரதமர் மோடி.

பிரதமர் மோடி மற்றும் அமித் ஷா ஆகியோர் பங்கேற்ற அனைத்து மேடைகளிலும் முன்னிருந்து நிகழ்ச்சிகளை நடத்தியவர் அண்ணாமலை. கடந்த பொதுத் தேர்தலில் கூட தனி விமானம் மூலம் 100 தொகுதிகளில் பிரச்சாரம் செய்தது அண்ணாமலை தான். அவருக்கு ஏதாவது கருத்து வேறுபாடு இருந்திருந்தால் அன்றைக்கே சொல்லி இருக்கலாம். ஆனால், இப்போது இது குறித்து சொல்வது சரியாக இருக்காது.

பாஜகவில் இருந்து ஒரு சிலர் அண்ணாமலையின் இயக்கத்துக்குச் சென்று இருக்கிறார்கள். அவர்கள் தெரிந்தோ, தெரியாமலோ அங்கு சென்று இருக்கலாம். அவர்கள் மீண்டும் இந்தக் கட்சியில் இணைய வேண்டும். எந்த நடவடிக்கையும் எடுக்க மாட்டோம் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். பாஜக பலமாகத்தான் இருக்கிறது; யார் பாஜக பலவீனமாக இருக்கிறது என சொன்னார்கள்?

அதிமுகவில் நடப்பது உட்கட்சி பிரச்சினை. அது குறித்து நான் பேசமுடியாது. இதே கூட்டணியோடு சேர்ந்து உள்ளாட்சித் தேர்தலில் பாஜக போட்டியிடும்.

அண்ணாமலையுடன் நல்ல உறவுடன்தான் இருந்தேன். அண்ணாமலையோடு எனக்கு எந்தக் கருத்து வேறுபாடும் இல்லை. ஜூன் 4 அன்று கூட அவருக்கு பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்தேன்.

திமுக காங்கிரஸ் பிரிக்க முடியாத கூட்டணியாக இருந்தது. இப்போது காங்கிரஸ் விலகிச் சென்றுவிட்டது. காங்கிரஸ் கட்சி தோழமைக் கட்சிகளை தோளுக்கு மேல் ஏறி நின்று செவியைக் கடிக்கக் கூடிய கட்சி. அவர்களை நம்பிப் போனால் இதுதான் நடக்கும்" என்று அவர் கூறியுள்ளார்.

இதைத் தொடர்ந்து அவர் வெளியிட்ட அறிக்கையில், "கவனச் சிதறலை உருவாக்கும் பல்வேறு செயல்கள், அரசியல் நிகழ்வுகள் நம்மை சுற்றி நடந்தாலும், அதனால் பாதிக்கப்படாமல் பாதையிலிருந்து விலகாமல், பிரதமர் மோடி மற்றும் நமது தலைவர்கள் முன்னெடுத்துக் கொண்ட இலக்கினை நோக்கிய பயணமே நமது பயணமாகும்.

கட்சியின் உறுப்பினராகவோ, நிர்வாகியாகவோ இருந்து கொண்டு அரசியல் சார்ந்த, அரசியலில் ஈடுபட விருப்பமுள்ள இதர அமைப்புகளுடனும் தொடர்பில் இருத்தல் அல்லது அந்த அமைப்புகளின் உறுப்பினராதல் என்பது நாம் நமது கட்சிக்கு செய்யும் துரோகமாகும்.

பிரதமர் மோடி அரசியலை முன்னெடுக்கும் வேறெந்த இயக்கத்திற்கும் ஆதரவோ, ஆசியோ வழங்கவில்லை. நமது தொண்டர்களும், நிர்வாகிகளும் பாஜக தவிர அரசியலை மையமாக வைத்து நடக்கும் இதர அமைப்புகளின் உறுப்பினராகவோ, ஆதரவாளராகவோ இருக்க வேண்டாம் என்று அறிவுறுத்தப்படுகிறார்கள். அப்படி இருந்தால் அது கட்சி விதிமீறலாக கருதப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்" என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

மானாமதுரை தொகுதி மக்களின் கோரிக்கைகள் உடனுக்குடன் நிறைவேற்றப்படும்: எம்எல்ஏ இளங்கோவன் உறுதி

மானாமதுரை, ஜூன் ..7- சிவகங்கை மாவட்டம் மானாமதுரை சுந்தரபுரம் தெருவில் புதுப்பிக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தை மானாமதுரை தொகுதி எம்எல்ஏ இளங்கோவன் திறந்து வைத்தார். நிகழ்ச்சியில் தவெக சிவகங்கை தெற்கு மாவட்ட செயலாளர் முத்துபாரதி, நகர செயலாளர் நம்பிராஜன், கட்சி நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர். தொடர்ந்து பொதுமக்களுக்கு மரக்கன்றுகள் வழங்கப்பட்டன.பின்னர் பேசிய எம்எல்ஏ

இளங்கோவன், மானாமதுரை தொகுதி மக்களின் அடிப்படை வசதிகள் மற்றும் நீண்டகால கோரிக்கைகள் மீது சிறப்பு கவனம் செலுத்தப்படும் என்றார். நடைபெற்று வரும் வளர்ச்சித் திட்டங்கள் ஆய்வு செய்யப்பட்டு அவற்றை விரைந்து நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார்.மேலும், பொதுமக்கள் தங்களது குறைகளை நேரடியாக தெரிவித்து உடனுக்குடன் தீர்வு பெறும் வகையில் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் செயல்படும் எனவும் அவர் கூறினார். புதிய அலுவலகம் மூலம் மக்கள் சேவைப் பணிகள் மேலும் விரிவுபடுத்தப்படும் என தெரிவிக்கப்பட்டது.

உலக சுற்றுச்சூழல் தினம்: இளையான்குடி நீதிமன்ற வளாகத்தில் மரக்கன்றுகள் நடப்பட்டது

இளையான்குடி, ஜூன்.7- உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு, தேசிய சட்டப் பணிகள் ஆணைக்குழு மற்றும் தமிழ்நாடு மாநில சட்டப் பணிகள் ஆணைக்குழுவின் செயல் திட்டத்தின்படி, சிவகங்கை மாவட்டம் இளையான்குடி நீதிமன்ற வளாகத்தில் மரக்கன்றுகள் நடும் நிகழ்ச்சி நடைபெற்றது. முதன்மை மாவட்ட நீதிபதி வி. ராமலிங்கம் அறிவுரையின்படியும், மாவட்ட சட்டப் பணிகள் ஆணைக்குழு செயலாளர் ஜெ. அனிதா கிறிஸ்டி ஆலோசனையின்படியும், வட்ட சட்டப் பணிகள் குழுத் தலைவர் மற்றும் மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிபதி ஆர். மணிவர்மன் வழிகாட்டுதலின்படியும் நிகழ்ச்சி நடைபெற்றது. மாலை 4.30 மணியளவில் நடைபெற்ற நிகழ்ச்சியில் நீதிமன்ற வளாகத்தில் மரக்கன்றுகள் நடப்பட்டன. இதில் வழக்கறிஞர்கள் முத்துசாமி, ரவிகுமார், அரசு வழக்கறிஞர் பார்த்தசாரதி, சத்தியேந்திரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.மேலும் நீதிமன்ற பணியாளர்கள் மற்றும் வட்ட சட்டப் பணிகள் குழு உறுப்பினர் இளவரசன் உள்ளிட்டோரும் நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

■ உலக சுற்று சூழல் தினத்தை முன்னிட்டு, மாவட்ட வன அலுவலர் கூடலூர் வனக்கோட்டம் அவர்களின் அறிவுரை படி கூடலூர் வனக்கோட்டத்திற்குட்பட்ட பொன்னூர், பந்தலூர், தேவாலா பகுதிகளில் உள்ள அரசு பள்ளிகளில் மர கன்றுகள் நடப்பட்டு பள்ளி மாணவ மாணவியருக்கு சுற்று சூழல் பற்றிய விழிப்புணர்வு வழங்கப்பட்டது

அறிவியல் இயக்கம் சார்பாக கல்லல் பள்ளியில் சுற்றுச்சூழல் தினம் கொண்டாடப்பட்டது

கல்லல், ஜூன்.7- உலகச் சுற்றுச்சூழல் தினம் ஒவ்வோர் ஆண்டும் ஜூன் 5 அன்று உலகம் முழுவதும் கொண்டாடப்பட்டு வருகிறது. அத்தினத்தில் சுற்றுச்சூழல் பாதிப்புகள் குறித்தும், சுற்றுச்சூழல் விழிப்புணர்வு குறித்தும் கருத்தரங்கங்கள், பேச்சு, கட்டுரைப் போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு அறிவியல் இயக்கமும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு தொடர்பான முன்னெடுப்புகளை மாநிலம் முழுவதும் தொடர்ந்து செய்து வருகிறது. அதன் ஒரு பகுதியாக சிவகங்கை மாவட்டம் கல்லல் முருகப்பா மேல்நிலைப் பள்ளியில் தமிழ்நாடு அறிவியல் இயக்க கிளை சார்பாக உலக சுற்றுச்சூழல் தினம் கொண்டாடப்பட்டது. விழாவிற்கு தலைமை ஏற்ற ஆசிரியர் சாத்தையா தொழிற்சாலைகள் மற்றும்

வாகனப் புகையால் ஏற்படும் ஓசோன் படல பாதிப்புகளையும், மரங்களின் முக்கியத்துவத்தையும் எடுத்துரைத்தார். சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட ஆசிரியர் சந்தானகிருஷ்ணன் வீடுகள், வகுப்பறைகள், வெளியிடங்களில் சுற்றுச்சூழல் பாதிப்பு எவ்வாறு ஏற்படுகிறது என்பதையும், அதை குறைப்பதற்கு மாணவர்கள் எத்தகைய நடைமுறைகளை கடைபிடிக்க வேண்டும் என்பதையும் விளக்கினார். ஆசிரியை கற்பகவல்லி தனது உரையில் மக்கும் மற்றும் மக்காத குப்பைகளின் தன்மைகளையும், சுற்றுச்சூழல் மீது ஒவ்வொருவருக்கும் இருக்க வேண்டிய விழிப்புணர்வு பற்றியும் தெளிவுபடுத்தினார். விழாவை ஒருங்கிணைத்த தமிழ்நாடு அறிவியல் இயக்க சிவகங்கை மாவட்ட செயலாளர் ஆசிரியர் பிரபு உலக வெப்பயமாதலின் விளைவுகளையும், சுற்றுச்சூழல் பாதிப்பால் இந்த உலகம் எதிர் கொளள உள்ள சவால்களையும் புள்ளி விவரங்களுடன் எடுத்துக் கூறினார். சுமார் 100 மாணவர்கள் கலந்து கொண்ட இந்த நிகழ்ச்சியில் சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்த ஆசிரியர்களின் வினாக்களுக்கு பதிலளித்த மாணவ மாணவிகளுக்கு அறிவியல் வெளியீடான விஞ்ஞான துளிர் புத்தகம் பரிசாக வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக ஆசிரியர் கண்ணதாசன் முன்னிலையில் பள்ளி வளாகத்தில் மரக்கன்றுகள் நடப்பட்டது

கல்லல் ஒன்றியப் பகுதிகளில் நீர்மோர் பந்தல் திறந்து வைப்பு

ஒசெ அலெக்சாண்டர் . கணேசன் . தலைமை . கட்டத்தேவன் கார்த்திக் ஏற்பாடு

கல்லல், ஜூன்.7- கோடை கால வெப்பத்திலிருந்து பொதுமக்களை காத்திடும் பொருட்டு தவெக கழகத்தினர் சிவகங்கை மாவட்டம் கல்லல் தென்மேற்கு ஒன்றிய தவெக கழகம் சார்பில் கல்லல் பேருந்து நிலையம் . கல்லல் அக்ரஹாரம் ஆகிய பகுதிகளில் நீர் மோர் பந்தல்கள் திறக்கப்பட்டதுதவெக பிரமுகர் கட்டத்தேவன் கார்த்திக் ஏற்பாட்டில் கல்லல் தென்மேற்கு ஒன்றியக் கழக செயலாளர் அலெக்சாண்டர் . தென்கிழக்கு ஒன்றிய செயலாளர் கே. கணேசன் ஆகியோரது தலைமையில் நீர் மோர் பந்தல் அமைக்கப்பட்டிருந்தது... மாவட்ட இணைச் செயலாளர் காளையார் கோவில் காளீஸ்வரன் . ஒன்றிய இணைச் செயலாளர்கள் ஆல்பர்ட் . பாரி கணேஷ் . ஒன்றிய துணைச் செயலாளர் ராஜேஸ்வரி . ஒன்றிய செயற்குழு உறுப்பினர்களான லீலாவதி . ரமேஷ் . பூமதி ஆகியோரது முன்னிலையில் சிவகங்கை தெற்கு மாவட்டக் கழக செயலாளர் முத்துபாரதி . சிவகங்கை சட்டமன்ற உறுப்பினர் குழந்தைராணி நாச்சியார் ஆகியோர் கலந்து கொண்டு திறந்து வைத்தனர்...இதில் மோர். சர்பத் . நுங்கு . தர்பூசணி . வெள்ளரி உள்ளிட்ட பொதுமக்களின் தாகத்தை போக்கிடும் பொருட்கள் அதிகளவில் இடம்பெற்றிருந்தது...இந்த நிகழ்ச்சியின் போது கல்லல் ஒன்றிய நிர்வாகிகளான மகளிரணி தமிழரசி . விஜயா . விஜயலெட்சுமி கிளைக் கழக செயலாளர் செம்பனூர் சித்ராதேவி . சிவகங்கை டி.கே.ஏ.மாடர்ன் ரைஸ் மில் வீரபத்திரன் . சிவகங்கை மூக்குத்தி பாலா உள்ளிட்ட ஏராளமான தவெ கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்...இத்தகைய மக்கள் சேவைகளை ஏற்படுத்திக் கொடுத்த தவெக நிர்வாகிகள் அனைவருக்கும் பொதுமக்கள் தங்களது நன்றியினை தெரிவித்துக் கொண்டனர்...

■ சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் 2026ஆம் ஆண்டு +2 பொதுத்தேர்வில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவிகளுக்கு MDRKNM அறக்கட்டளை சார்பில் ரொக்கப் பரிசுத்தொகை வழங்கப்பட்டது. இதில் பள்ளியில் முதல் இடம் பெற்ற மாணவிக்கு ரூ.5,000, இரண்டாம் இடம் பெற்ற மாணவிக்கு ரூ.4,000 மற்றும் மூன்றாம் இடம் பெற்ற மாணவிக்கு ரூ.3,000 வழங்கி பாராட்டினர். நடைபெற்ற நிகழ்ச்சியில் பள்ளித் தலைமை ஆசிரியர், ஆசிரியர்கள், மாணவிகளின் பெற்றோர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டு மாணவிகளை வாழ்த்தினர். கல்வியில் சிறந்து விளங்கிய மாணவிகளின் சாதனையை ஊக்குவிக்கும் வகையில் அறக்கட்டளையின் இந்த முயற்சி பாராட்டைப் பெற்றது.

300 க்கும் மேற்பட்ட மாற்றுக் கட்சியினர் மாசெ.முத்துபாரதி .எம்எல்ஏ குழந்தைராணி நாச்சியார் முன்னிலையில் தவெகவில் இணைப்பு

தொண்டரணி அமைப்பாளர் சஞ்சீவி தலைமை . மாவட்ட தொண்டரணி மனுநீதிச் சோழன் ஏற்பாடு

சிவகங்கை, ஜூன்.7- சிவகங்கை மாவட்டத்தில் பரவலாகவே மாற்றுக் கட்சியினர் தமிழக வெற்றிக் கழகத்தில் அதிகளவில் இணைகின்றனர்...அந்த வகையில் சிவகங்கை தெற்கு மாவட்ட தொண்டரணி அமைப்பாளர் அ.கருங்குளம் சஞ்சீவ்குமார் தலைமையில் . மாவட்ட தொண்டரணி நிர்வாகி தொ.மனுநீதிச் சோழன் ஏற்பாட்டில் கல்லல் தென்மேற்கு ஒன்றியம் அ.கருங்குளம் ஊராட்சியில் சுமார் முன்னூறுக்கும் மேற்பட்ட மாற்றுக் கட்சியினர் சட்டமன்ற உறுப்பினர் குழந்தைராணி நாச்சியார். தெற்கு மாவட்டக்கழக செயலாளர் முத்துபாரதி ஆகியோரது முன்னிலையில் தங்களை தவெகவில் இணைத்துக் கொண்டனர்...மாவட்ட இணைச் செயலாளர் காளையார்கோவில் காளீஸ்வரன் . கல்லல் ஒன்றியக் கழக செயலாளர்களான அலெக்சாண்டர் . கே.கணேசன் ஆகியோரது



முன்னிலையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் தென்கிழக்கு . மற்றும் தென்மேற்கு ஒன்றியக் கழக நிர்வாகிகள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்...முன்னதாக புதிதாக அமைக்கப்பட்ட தவெக கொடியினை சட்டமன்ற உறுப்பினர் குழந்தைராணி நாச்சியார் ஏற்றி வைத்தார்...அதனைத் தொடர்ந்து ஐநூறுக்கும் மேற்பட்டோருக்கு காலைச் சிற்றுண்டி மற்றும் அறுசுவை அசைவ உணவு பரிமாறப்பட்டது... இந்த நிகழ்ச்சியில் கல்லல் ஒன்றியக்கழக நிர்வாகிகளான பூசத்துறை, வேம்பனி விஜய், குலோத்துங்கன், சங்கர், திருமலை காளி, செல்வி, சாருலதா ஆகியோரும் . விழா முழு ஏற்பாடு மாவட்ட தொண்டரணி நிர்வாகி தொ.மனு நீதி சோழன் . மாவட்ட தொண்டரணி அமைப்பாளர் பொறியாளர் சஞ்சீவ் குமார். சிவகங்கை டி.கே.ஏ.மாடர்ன் ரைஸ் மில் வீரபத்திரன் . சிவகங்கை மூக்குத்தி பாலா உள்ளிட்ட ஏராளமான நிர்வாகிகள் கலந்து கொண்டனர்...நிகழ்ச்சி ஏற்பாடுகளை மாவட்ட தொண்டரணி கருங்குளம் மனுநீதிச்சோழன் சிறப்பாக செய்திருந்தார்....

■ தேனி மாவட்டத்தில் புகையிலை தடுப்பு நடவடிக்கைகள் தொடர்பாக காவல்துறையினர் தீவிர கண்காணிப்பு மேற்கொண்டு வருகின்றனர்.அதன் அடிப்படையில் இதுவரை மொத்தம் 102 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 2008 கிலோ கிராம் புகையிலை பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.கைப்பற்றப்பட்ட புகையிலை பொருட்களை நீதிமன்ற உத்தரவின்பேரில் தேனி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் டாக்டர் B. சினேஹாப்ரியா, தலைமையில் கொட்டி அழிக்கப்பட்டது.மேலும், தேனி மாவட்டத்தில் புகையிலைப் பொருட்களின் புழக்கத்தை முற்றிலும் தடுக்கும் நோக்கில், புகையிலை விற்பனை மற்றும் கடத்தல் சம்பவங்களில் ஈடுபடுபவர்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் என தேனி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் எச்சரித்துள்ளார்.மேலும் இந்நிகழ்வில் கூடுதல் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் மற்றும் உணவு பாதுகாப்பு துறை அதிகாரிகள் உடன் இருந்தனர்

■ தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் தாலுகா, குரங்கணி அருகே உள்ள கொட்டக்குடி கிராமத்திலுள்ள பள்ளி மாணவ மாணவியர்கள் மற்றும் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் போடிநாயக்கனூர் பேருந்து நிலையத்திலிருந்து வழித்தட குறியீடு எண் 048கி பேருந்து காலையிலிருந்து மாலை வரை 5.30, 7.50, 11.15, 14.30, 16.10, 17.30 ஆகிய நேரங்களில் குரங்கணி வழித்தடத்தில் இயக்கப்பட்டு வருகிறது. குரங்கணிக்கு முன்பு சுமார் 1.0 கி.மீ. தொலைவில் கொட்டக்குடி பிரிவு உள்ளது. கொட்டக்குடி பிரிவிலிருந்து சுமார் 1.5 கி.மீ. தொலைவில் கொட்டக்குடி கிராமம் உள்ளது. மேற்கண்ட வழித்தடத்தை போக்குவரத்துக் கழக உதவிமேலாளர் மற்றும் கிளை மேலாளர் ஆகியோர் நேரில் ஆய்வு மேற்கொண்டனர். கொட்டக்குடி பிரிவிலிருந்து கொட்டக்குடி வரை உள்ள மலைவழிச்சாலை குறுகலாக உள்ளது. தற்போது 210 WB பேருந்து குரங்கனிக்கு இயக்கப்பட்டு வருகிறது. 210WB பேருந்து கொட்டக்குடி சாலையில் இயக்க இயலாததால் இன்று காலை 176WB பேருந்தை கொட்டக்குடி வரை Trail முறையில் இயக்கி பார்க்கப்பட்டது. எனவே, பள்ளி மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் கோரிக்கையை நிறைவேற்றும் பொருட்டு, 176WB பேருந்தை காலை மற்றும் மாலை வேளையில் குரங்கணி செல்லும் பேருந்து கொட்டக்குடிக்கு இயக்கப்பட உள்ளது.

உதகையில் அரசு உயர் அலுவலர்களுடனான ஆய்வு கூட்டம்

உதகை, ஜூன்.7- நீலகிரி மாவட்டம், உதகை சவாய் ஹோட்டலில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில், செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் மற்றும் துறையின் செயல்பாடுகள் குறித்து, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன் நாடாளுமன்ற குழு தலைவர் முனைவர் பக்கன் சிங் குலாஸ்தே தலைமையில், குழு உறுப்பினர்களான மல்லுரவி அருண்குமார் சாகர், அலோக் குமார் சுமன் ஹரிசந்திரா மீனா அவர்கள், கோவிந்த் மக்தப்பா கர்ஜோல் டக்குமல்ல பிரசாத ராவ் .பி.வில்சன் மில்தேஷ்குமார் வி.சிவதாசன் அவர்கள், சுமித்தா பல்மிக், தேவேந்திர பிரதாப் சிங் முனைவர் எம்.தனபால் ஆகியோர் முன்னிலையில், அரசு உயர் அலுவலர்களுடனான ஆய்வு கூட்டம் நடைபெற்றது. தமிழ்நாடு அரசின் சார்பில் கூடுதல் தலைமை செயலாளர் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை ககன்தீப்சிங் பேடி காவல்துறை சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவின் தலைவர் சாமுண்டீஸ்வரி, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை முதன்மை செயலாளர் என்.சுப்பையன் அவர்கள், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அரசு செயலாளர் கே.வீரராகவராவ், ஆதி திராவிடர் நலத்துறை இயக்குநர் கே.செந்தில்ராஜ் தாட்கோ மேலாண்மை இயக்குநர் கே.எஸ்.கந்தசாமி, கல்லூரி கல்வி ஆணையர் .பி பொன்னைய, பழங்குடியினர் நலத்துறை இயக்குநர் அண்ணாதுரை தோட்டக்கலைத்துறை இயக்குநர் விஜயராணி, மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு., உட்பட பலர் உள்ளனர்.

பாடியநல்லூர் ஊராட்சியில் சிறப்பு கிராம சபை கூட்டம்

மாதவரம், ஜூன்.7- திருவள்ளூர் மாவட்டம் மாதவரம் தொகுதி சோழவரம் ஒன்றியம் பாடியநல்லூர் ஊராட்சியில் உள்ள ஸ்ரீ கெங்கையம்மன் ஆலய வளாகத்தில் உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு சிறப்பு கிராமசபை கூட்டம் பாடியநல்லூர் ஊராட்சி செயலர் லோகநாதன் தலைமையில் நடைபெற்றது. பற்றாளர் சுகுமார் முன்னிலை வகித்தனர். இக்கூட்டத்தில் தூய்மை பாரத் இயக்கம், உலக சுற்றுச்சூழல் தின கொண்டாட்டம், தூய்மை கிராம் மற்றும் பாதுகாப்பான குடிநீர் பிரச்சாரம் குறித்து தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. இதில் மகளிர் சுய உதவி குழுக்கள், சமூக ஆர்வலர்கள், இளைஞர்கள் உள்ளிட்ட கிராமபொதுமக்கள் திரளாக கலந்துகொண்டனர்.முடிவில் உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு அனைவரும் உறுதிமொழி ஏற்றனர்.

தேனி மாவட்டம்ஆண்டிபட்டி ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் நடைபெற்றுவரும் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன்,நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்

ஆண்டிபட்டி, ஜூன்.7- தேனி மாவட்டம், ஆண்டிபட்டி ஊராட்சி ஒன்றியப்பகுதிகளில் நடைபெற்றுவரும் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். தேனி மாவட்டத்தில் உள்ள நகராட்சி, பேரூராட்சி மற்றும் ஊராட்சிப் பகுதிகளில் அரசின் பல்வேறு துறைகளின் சார்பில் குடிநீர் திட்டப்பணிகள், சுகாதாரப்பணிகள், சாலைப்பணிகள், உட்கட்டமைப்பு மேம்பாட்டுப் பணிகள் உள்ளிட்ட பல்வேறு வளர்ச்சித்திட்டப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதனடிப்படையில், இன்றையதினம் ஆண்டிபட்டி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பிச்சம்பட்டி ஊராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.12.5 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள நாடக மேடை கட்டுமானப்பணிகளையும், மொட்டனூத்து ஊராட்சியில் 15 ஆவது நிதிக்குழு மானியத்திட்டத்தின் கீழ் ரூ.45 இலட்சம் மதிப்பீட்டில் கட்டுப்பட்டுள்ள துணை சுகாதார நிலையம் கட்டுமான பணிகளையும், பாலகோம்பை ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளியில் குழந்தை நேய பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ. 18 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஒரு வகுப்பறை கட்டடம் கட்டுமானப் பணிகளையும், கதிர்நரசிங்காபுரம் ஊராட்சியில் 15 ஆவது நிதிக்குழு மானியத்திட்டத்தின் கீழ் ரூ.19.71 இலட்சம் மதிப்பீட்டில் 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி கட்டுமானப் பணிகளையும், ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் திட்டத்தின் கீழ் ரூ.5.90 கோடி மதிப்பீட்டில் ஆண்டிபட்டி ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடம் கட்டுமானப் பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். பணிகளை அரசின் விதிமுறைகளுக்கு உட்பட்டு, குறிப்பிட்ட காலத்திற்குள் முடித்து பயன்பாட்டுக்கு கொண்டுவர உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அறிவுறுத்தினார். முன்னதாக ராஜதானி ஊராட்சியில் உள்ள மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் பணிபுரியும் மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் பணியாளர்களின் எண்ணிக்கை, உள்நோயாளிகள் பிரிவில் உள்ள படுக்கை வசதி, புறநோயாளிகள் பிரிவில் சிகிச்சை பெற வருகை தந்த பொதுமக்களின் எண்ணிக்கை, சிகிச்சை அளிக்கப்படும் விதம், மருந்து, மாத்திரைகளின் இருப்பு உள்ளிட்ட அடிப்படை வசதிகள் குறித்தும் மற்றும் வருகை பதிவேடு, கர்ப்பிணி தாய்மார்கள் பதிவேடு உள்ளிட்ட பிற பதிவேடுகளையும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் ஆய்வு மேற்கொண்டார். இவ்வாய்வில் மாவட்ட சுகாதார அலுவலர் மரு.வரதராஜன், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் ஏ.எடிசன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சரவணன், ராகவன் உள்ளிட்ட அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

பெருங்களத்தூர் அரசினர் உயர்நிலைப்பள்ளியில் உலக சுற்றுச்சூழல் தினம் விழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது

பெருங்களத்தூர், ஜூன்.7- செங்கல்பட்டு மாவட்டம் பெருங்களத்தூர் அடுத்த பீர்க்கங்கரணை அரசு உயர்நிலைப் பள்ளியில் உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு, நுகர்வோர் கூட்டமைப்பு இந்தியா தமிழ்நாடு சார்பில் விழிப்புணர்வு நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது. இந்த நிகழ்ச்சி, தேசியத் தலைவர் டாக்டர் அனந்த் ஷர்மா அவர்களின் வழிகாட்டுதலின்படியும், தேசிய செயல் தலைவர் டாக்டர் எம்.செல்வராஜ் தலைமையில் சென்னை மண்டல செயலாளர் டாக்டர் கொளஞ் சியப்பன் ஏற்பாட்டில் நடைபெற்றது.நிகழ்ச்சியில் மாணவர்களிடையே சுற்றுச்சூழல் பாதுகாப்பு, இயற்கை வளங்களின் முக்கியத்துவம், நுகர்வோர் உரிமைகள் மற்றும் சமூகப் பொறுப்புணர்வு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. சிறப்புரையாற்றிய டாக்டர் எம். செல்வராஜ் அவர்கள், சுற்றுச்சூழலைப் பாதுகாப்பது ஒவ்வொரு குடிமகனின் கடமை என்றும், எதிர்கால தலைமுறைக்கு பசுமையான சூழலை உருவாக்குவதில் மாணவர்களின் பங்கு மிக முக்கியமானது என்றும் வலியுறுத்தினார்.மேலும், மாணவர்களுடன் கலந்துரையாடி, சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் நுகர்வோர் விழிப்புணர்வு தொடர்பான பல்வேறு கேள்விகளுக்கு விளக்கமளித்தார். மாணவர்கள் ஆர்வத்துடன் கலந்துகொண்டு தங்களது கருத்துக்களையும் பகிர்ந்து கொண்டனர். நிகழ்ச்சியின் முக்கிய அம்சமாக போதை இல்லா தமிழகம் உருவாக்க உறுதிமொழியை மாணவர்கள் ஏற்றுக்கொண்டனர். இளம் தலைமுறையினர் போதைப்பொருள் பழக்கத்திலிருந்து விலகி, ஆரோக்கியமான மற்றும் பொறுப்பான சமுதாயத்தை உருவாக்க முன்வர வேண்டும் என்ற செய்தி வலியுறுத்தப் பட்டது.இந்நிகழ்வில் ஜோ ரேமண்ட் (National GC Member), ஆர். கணேஷ் (Chennai Zonal President), கே. இளங்கோவன் (Chennai Zonal General Secretary), கபிலன் (Chennai Zonal Secretary), நாராயணசாமி (CCI Member) ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.

மாணவர்களின் உற்சாகமான பங்கேற்புடன் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் சுற்றுச்சூழல் பாதுகாப்பு, நுகர்வோர் விழிப்புணர்வு மற்றும் சமூக நலன் குறித்த பொறுப்புணர்வை வளர்க்கும் வகையில் பயனுள்ளதாக அமைந்தது.நுகர்வோர் கூட்டமைப்பு இந்தியா தமிழ்நாடு சார்பில் சமூக விழிப்புணர்வு மற்றும் பொதுநலன் சார்ந்த பல்வேறு திட்டங்கள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.தலைப்பு பரிந்துரை

"உலக சுற்றுச்சூழல் தினம்: மாணவர்கள் போதை இல்லா தமிழகம் உருவாக்க உறுதிமொழி ஏற்றப்பட்டது

உலக சுற்றுச்சூழல் தினம், வெலிங்டன் மெட்ராஸ் ரெஜிமென்டல் சென்டர் சார்பில் 1,500 மரக்கன்றுகள் நடவு

நீலகிரி, ஜூன்.7- நீலகிரி மாவட்டம் வெலிங்டனில் உள்ள மெட்ராஸ் ரெஜிமென்டல் சென்டர் (விஎஸிசி) சார்பில், உலக சுற்றுச்சூழல் தினம் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. "இயற்கையால் ஈர்க்கப்பட்டு. காலநிலைக்காக.நமது எதிர்காலத்திற்காக" என்ற உன்னதக் கருப்பொருளின் கீழ், பெருமளவிலான மரக்கன்றுகள் நடும் விழா, சுற்றுச்சூழல் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மற்றும் நிலையான வாழ்வியல் முன்முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.இக்கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக, வெலிங்டன் ராணுவ முகாம் பகுதி முழுவதும் 'மியாவாக்கி' (Miyawaki) அடர்வன முறையில் 1,500 மரக்கன்றுகள் நடப்பட்டன. பல்லுயிர்ப் பெருக்கத்தை ஊக்குவிக்கவும், சுற்றுச்சூழல் பின்னடைவைத் தாங்கி அடர்ந்த, சுயசார்புடைய பசுமைச் சூழலை உருவாக்கவும் இந்த மியாவாக்கி முறை பயன்படுத்தப்பட்டுள்ளது. இவ்விழாவில் ராணுவ வீரர்கள், அவர்களது குடும்பத்தினர் மற்றும் குழந்தைகள் மிகுந்த உற்சாகத்துடன் கலந்துகொண்டு, நட்ட மரக்கன்றுகளைப் பாதுகாத்து வளர்க்கவும், சுற்றுச்சூழலுக்கு உகந்த வாழ்வியல் முறைகளைப் பின்பற்றவும் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர். மேலும், நெகிழி இல்லாத தூய்மையான சூழலை உருவாக்குவதை உறுதிப்படுத்தும் வகையில் 'பிளாஸ்டிக் தவிர்ப்பு' உறுதிமொழியும் ஏற்கப்பட்டது.முக்கிய விழிப்புணர்வு முன்முயற்சியாக, நீலகிரியின் மென்மையான சுற்றுச்சூழல் அமைப்பைப் பாதுகாப்பதில் அடுத்த தலைமுறையினரை ஈடுபடுத்தும் நோக்கில், உள்ளூர் பள்ளிகளுடன் இணைந்து விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை எம்.ஆர்.சி நடத்தியது. இந்த கலந்துரையாடல் நிகழ்ச்சிகள் மூலம், இயற்கை வளங்களைப் பாதுகாக்கும் பாதுகாவலர்களாகவும், பங்காளிகளாகவும் மாற மாணவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் எம்.ஆர்.சி கமாண்டன்ட் பிரிகேடியர் கிருஷ்ணேந்து தாஸ் பேசியதாவது:நீலகிரி மாவட்டத்தில் சமீபகாலமாக அதிகரித்து வரும் கடுமையான மழைப்பொழிவு, நிலச்சரிவு மற்றும் மண் அரிப்பு போன்ற சம்பவங்கள், காலநிலை மாற்றத்தின் தீவிர தாக்கத்தை நமக்கு உணர்த்தும் எச்சரிக்கை அறிகுறிகளாகும். இது நாம் அனைவரும் இணைந்து அவசரமாகச் செயல்பட வேண்டியதன் அவசியத்தை உணர்த்துகிறது. பூமி என்பது தற்போதைய தலைமுறை மட்டும் நுகர்ந்து அழிப்பதற்கான சொத்து அல்ல; அது வருங்காலத் தலைமுறையினருக்காக நாம் பாதுகாத்து ஒப்படைக்க வேண்டிய ஒரு பொறுப்பாகும். இன்று நாம் நடும் ஒவ்வொரு மரக்கன்றுகளும் சுற்றுச்சூழல் சமநிலையை மீட்டெடுக்கவும், காலநிலை மாற்ற பாதிப்புகளை எதிர்கொள்ளும் திறனை மேம்படுத்தவும், பசுமையான, பாதுகாப்பான மற்றும் நிலையான எதிர்காலத்தை உருவாக்கவும் எடுத்து வைக்கும் மிக முக்கியமான படியாகும். இவ்வாறு அவர் பேசினார். நீலகிரி மாவட்டத்தின் தனித்துவமான சுற்றுச்சூழல் பாரம்பரியத்தைப் பாதுகாப்பதிலும், காலநிலை மாற்றத்திற்கு எதிரான செயல்பாடுகளிலும் தங்களின் அர்ப்பணிப்பை இந்த நிகழ்வின் மூலம் ராணுவ மையம் மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளது.

நகரங்களை உலகத் தரத்திற்கு உயர்த்த முதலமைச்சர் விஜய் புதிய உத்தரவுகள்!

சென்னை, ஜூன்.7- மாநிலத்தின் நகரங்களை உலகத் தரத்திற்கு இணையாக மேம்படுத்தும் நோக்கில் முதலமைச்சர் விஜய் பல்வேறு முக்கிய உத்தரவுகளை அதிகாரிகளுக்கு வழங்கியுள்ளார். நகரங்களின் தூய்மை, பசுமை, உள்கட்டமைப்பு மற்றும் நிர்வாக வெளிப்படைத்தன்மையை மேம்படுத்தும் வகையில் இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதன்படி, பொதுச் சுவர்களில் போஸ்டர்கள் ஒட்டுவதற்கு அனுமதி வழங்கக்கூடாது என்றும், தேவையெனில் அதற்கென குறிப்பிட்ட இடங்களை மட்டுமே ஒதுக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும், சாலையோர பூங்காக்கள் மற்றும் சந்திப்புப் பகுதிகளில் உள்ள பசுமை வளாகங்களை முறையாக பராமரித்து, அவற்றின் தரத்தை அதிகாரிகள் தொடர்ந்து கண்காணிக்க வேண்டும் என உத்தரவிடப்பட்டுள்ளது. நகரங்களில் உள்ள அனைத்து தெருவிளக்குகளும் சரியாக செயல்படுகிறதா என்பதை வாரந்தோறும் அதிகாரிகள் நேரில் ஆய்வு செய்ய வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. நகராட்சி வருவாய் வசூலை அதிகரிக்கும் நோக்கில், வருவாய் அதிகாரிகள் மற்றும் கட்டணம் வசூலிப்பவர்களுடன் வாரந்தோறும் ஆய்வுக் கூட்டங்கள் நடத்தவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதேபோல், கட்டிட வரைபடங்களில் முழுமையான வெளிப்படைத்தன்மை கடைபிடிக்கப்பட வேண்டும் என்றும், நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவுக்குள் விண்ணப்பங்களுக்கு ஒப்புதல் வழங்கப்பட வேண்டும் என்றும் முதலமைச்சர் வலியுறுத்தியுள்ளார்.

மக்களுக்கு தரமான நகர்ப்புற வசதிகளை வழங்கவும், நகரங்களின் வளர்ச்சியை விரைவுபடுத்தவும் இந்த புதிய உத்தரவுகள் முக்கிய பங்காற்றும் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரிக்கு புதிய ஆம்புலன்ஸ் ஒப்படைப்பு

நெல்லை, ஜூன்.7- திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு புதிய ஆம்புலன்ஸ் வாகனம் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. மாவட்ட கனிமவள நிதி அரக்கட்டளையிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, இப்பொது நலச் சேவைக்காக புதிய ஆம்புலன்ஸ் வாகனம் வாங்கப்பட்டது. இந்த வாகனத்தை நெல்லை மாவட்ட ஆட்சியர் ஆனந்த் மோகன், அரசு மருத்துவமனை நிர்வாகத்திடம் முறைப்படி ஒப்படைத்து சேவையைத் தொடங்கி வைத்தார்.இந்த நிகழ்வின் போது, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை வினய்குமார் மீனா மற்றும் அரசு மருத்துவக்கல்லூரி முதல்வர் ரேவதிபாலன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மேலும், மாவட்ட மருத்துவமனை அதிகாரிகள் மற்றும் மாவட்ட ஊரக வளர்ச்சித் துறை அதிகாரிகள் பலர் இதில் கலந்து கொண்டனர்.

சேம்பார் நடுநிலைப் பள்ளியில் உலக சுற்றுச்சூழல் தின விழா

காளையார் கோவில், ஜூன்.7- சிவகங்கை மாவட்டம் காளையார் கோவில் ஒன்றியம் சேம்பார் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் உலக சுற்றுச்சூழல் தின கொண்டாட்டத்தை முன்னிட்டு மரம் நடும் விழா நடைபெற்றது. தலைமையாசிரியர் சுரேஷ் தலைமையில் மரம் நடு விழா நடைபெற்றது. மகிழ் முற்றம் அணிகளான குறிஞ்சி, முல்லை, நெய்தல், மருதம் மற்றும் பாலை அணி தலைவர்கள் முகேஷ், அருள் ஜோஷ்வின், டார்வின் தாவீது, லிடிஸ்ட்டினா ,மகதி, ரெபினா, அனன்யா, பால் ஹரிஷ், ஆஜிதா, விஷால், கிஷோர் கிஷன் மற்றும் உறுப்பினர்கள் பள்ளி வளாகத்தில் மரங்களை நட்டனர். இந்நிகழ்ச்சியில் பள்ளி பட்டதாரி ஆசிரியர்கள் முத்துக்குமார் ,காளீஸ்வரன், இடைநிலை ஆசிரியர்கள் முருகன், சகாய செல்வி, தன பாக்கியம் மற்றும் பள்ளி மேலாண்மை குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். பொறுப்பு தலைமையாசிரியர் சுரேஷ் சுற்றுச்சூழல் பாதுகாப்பு பற்றியும், வீட்டுக்கு ஒரு மரம் வளர்க்க வேண்டும் என்றும் மற்றும் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு பற்றியும் மாணவர்களுக்கு எடுத்துரைத்தார். மேலும்

ஐ.நா பொதுச்செயலாளர் அண்டோனியோ குட்டரெஸ் செய்தி பற்றி மாணவர்களிடம் விளக்கினார்."இந்த உலக சுற்றுச்சூழல் தினம் பிளாஸ்டிக் மாசுபாட்டை வெல்வதற்கான தீர்வுகளில் கவனம் செலுத்துகிறது. பிளாஸ்டிக் மாசு நம் கிரகத்தை மூச்சுத்திணற வைக்கிறது ஊ சுற்றுச்சூழல் அமைப்புகள், நல்வாழ்வு மற்றும் காலநிலையை பாதிக்கிறது.பிளாஸ்டிக் கழிவுகள் ஆறுகளை அடைக்கின்றன, கடலை மாசுபடுத்துகின்றன, வன விலங்குகளை ஆபத்தில் ஆழ்த்துகின்றன. அது சிறிய சிறிய துகள்களாக உடையும்போது, பூமியின் ஒவ்வொரு மூலையிலும் ஊடுருவுகிறது: எவரெஸ்ட் சிகரத்தின் உச்சியில் இருந்து கடலின் ஆழம் வரை; மனித முளையில் இருந்து தாய்ப்பால் வரை.ஆனால் அவசர மாற்றத்திற்கான இயக்கம் உருவாகி வருகிறது. மறுபயன்பாடு மற்றும் அதிக பொறுப்புணர்வை நோக்கிய நடவடிக்கைகளைக் காண்கிறோம்.ஒருமுறை பயன்படுத்தும் பிளாஸ்டிக்கை குறைக்கவும் கழிவு மேலாண்மையை மேம்படுத்தவும் கொள்கைகள் வருகின்றன. ஆனால் நாம் இன்னும் வேகமாக, மேலும் செல்ல வேண்டும்.பிளாஸ்டிக் மாசுபாட்டை முடிவுக்குக் கொண்டுவர ஒரு புதிய உலகளாவிய ஒப்பந்தத்தை உருவாக்க நாடுகள் ஒன்றிணையும்.இந்த ஆண்டு லட்சியமான, நம்பகமான மற்றும் நியாயமான ஒப்பந்தம் நமக்குத் தேவை.ஒன்றாக, பிளாஸ்டிக் மாசுபாடு என்ற கொடுமையை முடிவுக்குக் கொண்டுவருவோம்.*"இயற்கையால் ஈர்க்கப்பட்டு, காலநிலைக்காக, நம் எதிர்காலத்திற்காக"*இயற்கையிடம் இருந்து கற்றுக் கொண்டு, காலநிலை மாற்றத்தை எதிர்த்துப் போராடி பாதுகாப்பான எதிர்காலத்திற்காக ஒன்றிணைந்து செயல்படுவதன் முக்கியத்துவத்தை இந்த தீம் எடுத்துக்காட்டுகிறது.*நாம் செய்ய வேண்டியது:*மறு, குறை, மறுபயன்பாடு, மறுசுழற்சி* Refuse, Reduce, Reuse, Recycle,தண்ணீரை சேமிப்பது, பிளாஸ்டிக் பயன்பாட்டை குறைப்பது, மரம் நடுவது, மின்சாரத்தை சேமிப்பதுகுப்பையை வெளியே எறியாமல் சுற்றுப்புறத்தை மதிப்பது எவ்வாறு அந்த கருத்துக்களை மாணவர்களிடம் பகிர்ந்து கொண்டார்.

மதுரை மாநகராட்சி முறைகேடுகள்: யாரும் தப்பிக்க முடியாது! - அமைச்சர் நிர்மல் குமார் எச்சரிக்கை

மதுரை, ஜூன்.7- மதுரை மாவட்டத்தில் நடைபெற்று வரும் வளர்ச்சிப் பணிகள் மற்றும் பல்வேறு துறை சார்ந்த செயல்பாடுகள் குறித்து, எரிசக்தி மற்றும் சட்டத்துறை அமைச்சர் சி.டி.ஆர். நிர்மல் குமார் தலைமையில் அனைத்து துறை அலுவலர்களுடனான ஆலோசனைக் கூட்டம் இன்று அரசினர் விருந்தினர் மாளிகையில் நடைபெற்றது .கூட்டத்திற்குப் பிறகு செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர், மதுரை மாநகராட்சியில் நடைபெற்றதாகக் கூறப்படும் முறைகேடுகள் தொடர்பாக மாவட்ட ஆட்சியரும் மாநகராட்சி ஆணையாளரும் இணைந்து விரிவான மதிப்பீட்டு ஆய்வை மேற்கொள்ள உள்ளதாக தெரிவித்தார்."முறைகேடுகள் மற்றும் விதிமீறல்கள் எங்கு நடந்திருந்தாலும்

கண்டறிந்து, சம்பந்தப்பட்டவர்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். தவறு செய்தவர்கள் யாராக இருந்தாலும் தப்பிக்க முடியாது" என அவர் உறுதியாக கூறினார்.

மேலும், மாநகராட்சி முறைகேடுகளால் அரசுக்கு பல நூறு கோடி ரூபாய் வருவாய் இழப்பு ஏற்பட்டதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுகள் குறித்தும் முழுமையான ஆய்வு மேற்கொள்ளப்பட உள்ளதாக தெரிவித்தார். ஆய்வு முடிவுகளின் அடிப்படையில் அதிகாரப்பூர்வ அறிவிப்புகள் வெளியிடப்படும் என்றும் கூறினார்.டாஸ்மாக் கடைகள் மூடப்பட்ட பகுதிகளில் சட்டவிரோதமாக பார்கள் செயல்பட்டால், சம்பந்தப்பட்டவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் எச்சரித்தார்.ஹார்ட் டிஸ்க் திருட்டு விவகாரம்ஹார்ட் டிஸ்க் திருட்டு சம்பவம் தொடர்பாக காவல்துறை தீவிர விசாரணை மேற்கொண்டு வருவதாகவும், காணாமல் போன தரவுகள் குறித்த ஆய்வு நடைபெற்று வருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார். இந்த விவகாரத்தை தமிழக முதலமைச்சர் தினந்தோறும் கண்காணித்து வருவதாகவும், விசாரணை நிறைவடைந்த பின் முழு விவரங்களும் வெளியிடப்படும் என்றும் கூறினார்.இந்த ஆலோசனைக் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் ப. ஆகாஷ், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பி.கே. அரவிந்த், மாநகர காவல் துணை ஆணையர்(வடக்கு) எஸ். மதிவாணன்,இ.கா.ப.,,மாநகர காவல் துணை ஆணையர் (போக்குவரத்து). எஸ்.வனிதா , மாவட்ட வருவாய் அலுவலர் க.அன்பழகன் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் மாநகராட்சி மற்றும் பல்வேறு துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

ஊத்துக்கோட்டையில் PLH SCAN சென்டர் சார்பில் பழங்குடி மற்றும் மாற்றுத்திறனாளி கர்ப்பிணி பெண்களுக்கு இலவச ஆம்புலன்ஸ் சேவை துவக்க விழா

திருவள்ளூர், ஜூன்.7- திருவள்ளூர் மாவட்டம் ஊத்துக்கோட்டையில் இயங்கிவரும் PLH SCANS சென்டர் சார்பாக பழங்குடி மற்றும் மாற்றுதிறனாளி கர்பிணி பெண்களின் பயன்பாட்டிற்காக புதியதாக இலவச ஆம்புலன்ஸ் சேவை துவக்க விழா நடைபெற்றதுஇந்நிகழ்வில் MCKS தொண்டு திறுவனர் சவிதாராமன், சர்வதேச தனியார் பள்ளி தாளலர் PRO V.சுப்பிரமணியன் , ஸ்கேன்செண்டர் நிறுவனர் லியோ ஆகாஸ்ராஜ், இணை நிறுவனர் அரவிந்த்கிருஷ்ணன், ஒருங்கிணைப்பாளர் விஜயகாந்த் மற்றும் விவேகானந்தா கல்விகுழும தாளாலர் ரங்கநாதன், வியாபாரிகள் சங்க தலைவரும் லயன்ஸ்கிளப் தலைவருமான நடராஜன், பேரூராட்சி துணை தலைவர் குமரவேல், கவுன்சிலர் அபிராமி குமரவேல் , D.R.சுரேஷ் , சித்திக், வழக்கறிஞர் பாலகிருஷ்ணன் , கலந்துகொண்டு கொடியசைத்து துவக்கி வைத்து சிறப்பித்தினர் இந்த நிகழ்வில் கலந்து கொண்ட79 பழங்குடி மற்றும் மாற்று திறனாளிகளுக்கு கர்ப்பினி பெண்களுக்கு நலதிட்ட உதவிகள் வழங்கப்பட்டது குறிப்பிடதக்கது

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161